தேதி : ஜுலை 2019
இடம் : கோவை.

## கூடாரத்தின் கடிதம்

ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தினாலே அனைவருக்கும் சுகவாழ்வு உண்டாகட்டும், கடந்த மாதம் முழுவதும் பாதுகாத்து நடத்தி வந்த தேவனுக்கு கோடி நன்றி சொல்லுவோம். இந்த ஊழியத்தை நேசித்து ஜெபத்தாலும் பொருளாலும் தாங்கி வருகிற உங்கள் அனைவருக்காகவும் தேவனை துதிக்கிறோம். உங்கள் வாழ்வில் சுகவாழ்வாக துளிர்க்கும் என்று கட்டளையிடுவாராக!

ஆகஸ்ட் மாதம் தேவன் நமக்கு கொடுத்த அற்புதமான வாத்தைரைய வைத்து ஜெபிக்க போகிறோம். ஆதி. 18:14 "**கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?**" என்ற வார்த்தையின்படி நம்மை கர்த்தர் ஆசீர்வதிப்பராக.

கர்த்தர் சொன்ன வார்த்தையை உறுதிப்படுத்துபடி மீண்டும் தேவன் வார்த்தையை ஊறுதிப்படுத்தும் போது தேவனே சாராளிடம் கேட்கும் கேள்வி தான் கர்த்தரால் ஆகாத காரியம் உண்டா என்று, 25 வருடம் தேவன் சொன்ன வழியில் வந்தாலும் சாராளுக்கு விசுவாச குறைவு காணப்பட்டது உண்மை என்னவென்றால் ஆதி 18:10, நான் திரும்பவும் வருவேன் என்று ஆனால் ஆதி 18:11,12ல் சாராள் உள்ளளத்திலே நகைத்தால் என்று, பல வேளைகளில் நாமும் கூட பிறந்ததிலிருந்து கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்து வந்தாலும் நமக்கு ஆபிராகாம் போல் முழு விசுவாசத்தோடு இருப்போமா என்றால் கொஞ்சம் இல்லையென்று தான் சொல்ல முடியும். 11ம் வசனம் கவனமாக பாருங்கள் "ஆபிரகாமும் சாராளும் வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள் ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று" ஆகையால் தான் சாராள் நகைப்போடு பார்க்கிறால் எனக்கு அருமையானவர்களே, உன்னோடே சூழ்நிலையை நீ நம்பி வாழ்ந்து கொண்டு இருந்தால் உனக்கு ஏமாற்றம் தான் வரும், உன் சூழ்நிலை பார்த்து கர்த்தரையை நம்ப வேண்டாம், சங் 121:1 வசனம் சொல்லுவது போல் உங்களுக்கு எனக்கும் ஒத்தாசை வரும் தேவனை நோக்கி காத்துயிருங்கள், அவர் உன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்றால் உன் சூழ்நிலை அதற்கு எதிராக தான் தெரியும், ஆனால் விசுவாத்தை விட்டு விடாதே நிச்சயம் ஆசீர்வாதம் உண்டு,

எனவே நாம் செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் ஆபிராகாம் போல் விசுவாத்தை பிடித்துகொள்ளுவோம். வெகு நாட்களாக உன் ஜெபத்திற்கு பதில் வரவில்லை என்று நீ இருக்கிறாயோ? வெகு காலம் வர வேண்டிய ஆசீர்வாதம் வரவில்லை என்கிறாயோ? சூழ்நிலை பார்க்க வேண்டாம் உனக்கு வர வேண்டிது வரும் நீங்கள் சுகமாய் ஜீவிக்கும்படி தேவன் உங்களை ஆசீர்வதிப்பராக.

ஆமென்.!

கிறிஸ்துவின் பணியில்
ராஜ கூடார - தென் இந்திய மிஷனெரி இயக்கம்

**மிஷினெரி. பிரேம் குமார்**

1/1C, Rajaji Nagar, (BiMetal Berring Company Back Side Road,) P.N. Pudur, Coimbatore 641041. INDIA
T : 0 96777 31326 / 93847 41252 | E : info@kingtabernacle.com | **www.kingtabernacle.com**

# கடந்த மாதம் நமது ஊழிய விவரங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் கர்த்தர் அதிசயமாக நடத்திவந்தார், அவர் செய்ததை நினைத்து நாங்கள் ஆண்டவருக்கு நன்றி சொல்லுகிறோம், நாமும் இணைந்து தேவனுக்கு நன்றி சொல்வோமாக.

1. வாழுக்குபாறையில் கடந்த நாட்களில் ஒரு வாரம் மாலை நேர பொருளாதாரா ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது.

2. மீனாட்சிபுரத்தில் கடந்த நாட்களில் சபைக்கு ஒரு மைக் மற்றும் ஸ்பீக்கர் வாங்க உதவி செய்தார், சகோ. ஜேம்ஸ், ஆண்டவர் இந்த உதவியை செய்ததுக்காக ஆண்டவருக்கும் மற்றும் சகோ. ஜேம்ஸ் அவர்களுக்கும் எங்கள் நன்றி சொலுத்திகிறோம்.

3. மீனாட்சிபுரத்தில் ரொம்ப வருடமாக சபையின் கதவு சரியில்லாமல் இருந்தது ஆதாவது க த வே இல்லமால் இருந்தது ஆனால் கடந்த நாட்களில் சபையின் கதவு சரிபார்க்கப்பட்டது அதற்காக தேவனை துதிப்போம்.

4. மீனாட்சிபுரத்தில் கடந்த ஜுன் மாதங்களில் மூன்று நாள் சிறப்பு கூட்டம் நடத்த உதவி செய்தார். அதற்காக தேவனை துதிப்போம்.

5. P.N.புதூரின் சபையின் உள்புறம் மற்றும் வெளிப்புற வேலை செய்ய தேவன் கிருபை தந்துள்ளார், சபைக்கு SCREEN துணி வாங்கி கொடுத்த சகோதரி மேரி அம்மா அவர்களுக்கு ஆண்டவருக்கும் நன்றி செலுத்திகிறோம்.

6. P.N.புதூரின் சபையில் தேவனுடைய பெரிதான கிருபையால் நமது சபைக்கு வரும் இரண்டு விசுவாசிகளின் வீட்டு ஜெபக்கூட்டம் நடத்தினோம் புதிய ஆத்துமாக்கள் வர தேவன் கிருபை தந்தார்.

7. குறிப்பாக, நமது சபைக்கு தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் மேரியம்மாவின் கணவருக்கு இருந்த கால்வீக்கம், மற்றும் கால் வலியை தேவன் குணப்படுத்தினார். மேரியம்மாவின் மகன் சாமுவேல் படிப்பின் காரியங்களை தேவன் ஆசீர்வதித்தார். தன் மகளுடைய தொழிலை தேவன் ஆசீர்வதித்து, பெருகச் செய்தார் என்றும் கடந்த நாட்களில் சாட்சி பகிர்ந்தார்கள்.

8. நமது சபைக்கு வரும் புனிதம்மா என்ற தாயாருக்கு வீட்டுபத்திரம் மற்றும் குத்தகை பத்திரம் திரும்ப கிடைக்கவும், குத்தகை Renewal ஆக பணத்தையும், வீட்டு Owner கண்களில் தேவன் கிருபையும்,தயவையும் பெற செய்தார்.

9. நம் சபையில் மீனாட்சியம்மாவின் கணவர் சபைக்கு செல்வதை தடைசெய்யக் கூடாது என்று ஜெபித்தோம். தேவன் ஜெபத்தைக் கேட்டு, சகோதரி ஜெபத்திற்குச் செல்ல கணவர் தடைபண்ணுவதில்லை என்று சாட்சி பகிர்ந்தார்கள்.

10. நமது சபைக்கு வரும் ரூத்தம்மாவின் பேரப்பிள்ளை சரியாக உணவு எடுத்துக்கொள்ளாமல் இருந்தாள் சபையில், எல்லாரும் ஜெபித்தோம் ஜெபத்தைக் கேட்ட தேவன் அந்த சிறுபெண் உணவு தினமும் உண்ணும்படியாக கிருபை பாராட்டினார்.

11. நமது சபையில் கடந்த மே மாதம் திருமதி ஷைலஜா என்ற சகோதரியின் மகனுடைய வெளிநாடு வேலைக்காக ஜெபித்தோம். தேவ கிருபை மகன் தான் விரும்பிய வெளிநாட்டு வேலையை தேவன் தந்தார் என்று சாட்சி பகிர்ந்தார்கள்.

1/1C, Rajaji Nagar, (BiMetal Berring Company Back Side Road,) P.N. Pudur, Coimbatore 641041. INDIA
T : 0 96777 31326 / 93847 41252 | E : info@kingtabernacle.com | **www.kingtabernacle.com**

12. நமது சபையின் இட உரிமையாளர் திருமதி. பத்மினி அம்மா அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் வாகன விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார்.

13 சபையில் திரு. பத்ருசாமி, திருமதி. விஜி , திருமதி. சாந்தி மற்றும் சகோ ஆறுமுகம் என புதிய குடும்பங்களை தேவன் அழைத்து வந்தார்.

14. மாலேகவுண்டன் பாளையம் பல ஆண்டுகளாக அடைக்கப்பட்டிருந்த இந்த சபையினை தேவன் நம் KTM-SIMM மூலமாக திறந்திடவும், தேவன் கிருபை செய்தார்.

15. ஜுலை மாதம் 21 ஜு லை அன்று சிறப்பு கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு நடந்தது தேவன் மகிமைப்பட்டார்.

16. மீனாட்சிபுரத்தில் மாலை நேர பாட சாலை தொடங்கப்பட்டுள்ளது.

தேவனுக்கு நன்றி!

## ஜெபிக்க வேண்டிய காரியங்கள்

### ஒத்தக்கால்மண்டபம்

1. ஆகஸ்ட் 15ம் தேதி ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பம் என்ற கூட்டத்தில் பாஸ்டர்.வெஸ்லி ஐயா மற்றும் இலங்கையிலிருந்து வரும் பாஸ்ட்ர்.ஜான்சன் சசி இருவரும் தேவ செய்தி கொடுக்க இருக்கிறார்கள்.
2. ஆகஸ்ட் 17, 18ம் தேதி பாஸ்டர். ஜான்சன் சசி அவர்கள் தேவ செய்தி கொடுக்க இருக்கிறார்கள்.
3. ஆகஸ்ட் மாதம் முதல் நம்முடைய புதிய சபையில் மாலை நேர கூட்டம் தொடர்ந்து நடைபெற இருக்கிறது, அனோக புதிய ஆத்துமாக்கள் வர ஜெபிப்போம்.
4. பாப்பத்தி அம்மா நடக்க முடியாத சூழ்நிலை இருக்கிறார்கள், அவர்கள் புரன சுகம் பெற வேண்டும்.

### வழுக்குபாறை

1. சகோதரி அன்னாள் மகனுக்கு திருமணம் நடைபெறவும் பணத்தேவைகள் சந்திக்கபடவும்.
2. சபையில் நல்ல ஐக்கியம் ஏற்படவும் புதிய ஆத்துமாக்களுக்காவும் ஜெபிப்போம்
3. சபைக்கு என்று சொந்த இடம் வாங்கவும் பணத்தேவை சந்திக்கபடவும்
4. ஊழியர் குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட

### மீனாட்சிபுரம்

1. சபையின் மேற்கூரை சரிசெய்யப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்
2. சபைக்கு புதிய ஆத்துமாக்கள் வர தொடர்ந்து ஜெபித்துகொள்ளுங்கள்
3. சபைக்கு வருகின்ற ஜனங்களின் சுகம், பெலன், கடன்பிரச்சனை எல்லாம் மாற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### பி.நாகூர்

1. பழனியப்பன்,சரோஜம்மாள் அவர்களுடைய குடும்பத்தின் கடன்கள் அடைக்கப்பட்ட மகனுடைய தொழில் மற்றும் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட,புதிதாதா திருமணம் ஆகிய இவர்களுடைய மகன் குழந்தை பாக்கியம் பெற
2. ராக்கியப்பன், பாப்பாத்தி அவர்களுடைய குடும்ப ஆசீர்வாத்திற்காகவும், வேலை தொடர்ந்து கிடைக்கவும்.
4. மேரி அவர்களின் மகள் வீடு கட்ட இடம் வேண்டி மற்றும் உடல் ஆரோக்கியம் மற்றும் குடும்பம்

ஆசீர்வாதத்திற்காக.

5. காளீஸ்வரி அவர்களுடைய தகப்பனார் குடியிலிருந்து விடுபட, குடும்பம் இரட்சிக்கப்பட சகோதரி தொடர்ந்து சபைக்குவர.
6. மணிமேகலை அவர்களின் திருமணத்திற்காக மற்றும் தகப்பனார் குடியிலிருந்து விடுதலை பெற, தொடர்ந்து வேலைக்கு செல்ல
7. மேலும் நாகூர் சபையில் ஆத்துமாக்கள் வளர, திட்டம் செய்திருக்கிற கூட்டங்கள் (ஆகஸ்ட் 16) நல்லபடியாக நடைபெற, சபையின் தேவைகள் சந்திக்கப்பட மற்றும் சுற்றிலும் உள்ள கிராமங்கள் இரட்சிக்கப் பட தொடர்ந்து ஜெபிப்போம்.

### மாலேகவுண்டன் பாளையம்

2. சூழ்நிலைகளின் காரணமாக சபை கூடிவருதலை விட்டுவிட்ட தேவ ஜனங்கள் மீண்டும் இக்கூட்டங்களின் மூலம் ஐக்கியப்பட, ஏகமனதுடன் செயல்பட ஜெபிக்கவும்
3. ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையும், சிறப்பு கூட்டங்களும் தேவ பிரச்சன்னம், விடுதலை, மனமாற்றம், பரிசுத்தமடைதல் ஆயத்தமாகுதல் நிறைந்ததாக அமைந்திட ஜெபிக்கவும்
4. இக்கிராமத்திலுள்ள சிறுவர்கள், வாலிபர்கள் தொடப்பட்டு கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்பணித்திட ஜெபிக்கவும்.
5. சமயம் வாய்த்தாலும்,வாய்க்காவிட்டாலும் சத்தியத்தை சத்தியமாகவே போதித்து ஜனங்கள் தேவ சமூகத்திற்கு வழி நடத்திட தேவன் எங்களை வழிநடத்தி, பெலப்படுத்தும் படியாக..ஜெபிக்கவும்
6. மீதமுள்ள 5 மாதங்களில் 50 ஆத்துமாக்கள் என்னும் இலக்கை அடைந்திட ஜெபிக்கவும்.

### P.N. புதூர்

1. இந்த மாதம் வீட்டு ஜெபக்கூட்டங்கள் மூலமாக ஆத்துமா அறுவடை நடைபெற ஜெபிப்போம்.
2. சபையின் மீதி இருக்கிற வேலைகள் முடிக்க ஜெபிப்போம்.
3. சபைக்கு வருகிற புதிய ஆத்மாக்கள் தொடர்ந்து வரவும், புதிய குடும்பங்கள், வாலிபர்கள் என புதிய ஆத்மாக்கள் வரவும், நிறைந்திருக்கவும் ஜெபிப்போம்.
4. சபைக்கு என்று இடத்தை சொந்தமாக வாங்க ஜெபிப்போம்.
5. சபையின் ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் எடுக்கவும், திருவிருந்து ஆராதனை நடத்தவும்.
6. சபையின் மூலம் அடுத்த மாதம் நடைபெறும் (15 ஆகஸ்ட் 2019) சகோ.வெஸ்லி அய்யா கூட்ட ஆராதனையை தேவன் ஆசீர்வாதமாய் நடத்திதரவும்,அநேகர் வரவும்.

### இந்த வருட நமது ஊழியத்தின் நோக்கம்

1. இந்த வருடம் ஐந்து சபை கொண்டு வர (தற்பொழுது 2சபை நிறைவு செய்யப்பட்டுள்ளது)
2. வழுக்குபாறை என்று இடம் வாங்கும் முயற்சி
3. நம்முடைய எல்லா மிஷினெரிகள் தேவைகள் சந்திக்கப்பட்டு, சந்தோஷமாக வாழ்க்கை வாழ.
4. கோவையின் ஆய்வு முடிக்க மற்றும் மாதம் மாதம் நம்முடைய ஊழியத்தின் பண தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

### பொது காரியங்கள்

1. கிறிஸ்தவர்களுக்கு விரோமாக ஆனோக காரியங்கள் எழும்பி கொண்டு இருக்கிறது, அவைகள் கிறிஸ்தவர்களுக்கு சாதகமாக மாற்றப்பட ஜெபிப்போம்.
2. இருதி காலங்களில் அன்பு தனிந்து போகும் என்ற வார்த்தை போல், கிறிஸ்தவர்களுக்குள் ஒற்றுமையில்லா காரியங்கள் மாற்றப்பட ஜெபிப்போம்.
3. இந்த ஜெப பாங்களர்கள் பெறுக ஜெபிப்போம்.